# 28-06-2024 செய்தி

## பஞ்சமி நில மீட்பு

- 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ‘படியாள்’ என்கிற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்கள், உயர் சாதி நிலச்சுவான்தார்களின் நிலங்களில் விலங்குகளைப் போல் உழைக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- இந்த இழிநிலை நீங்க வேண்டுமெனில், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களைத் தலித் மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என்று அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன் போன்ற தலித் தலைவர்கள் ஆங்கில ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுத்துவந்தனர்.

**நிபந்தனைகள்**

- இதனிடையே அப்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தின் பொறுப்பு ஆட்சியராக இருந்து ஜேம்ஸ் ஹென்றி அப்பர்லே திரமென்ஹீர், 1891 இல் பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக அறிக்கை ஒன்றை அனுப்பினார்.
- அந்த அறிக்கையைப் பரிசீலித்த பிரிட்டன் நாடாளுமன்றம் 1892 செப்டம்பர் 30 ஆம் நாள், தலித் மக்களுக்கு இலவசமாக நிலம் வழங்க வேண்டியதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழகத்தின் சில மாவட்டங்களில் குறிப்பாக செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் (தற்போதைய திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்கள்) வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரசுக்குச் சொந்தமான சுமார் 12 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.
- பஞ்சத்தின் பிடியில் சிக்குண்டு நலிந்து வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டமையால் இந்நிலங்கள், ‘பஞ்சமி நிலங்கள்’ என அழைக்கப்பட்டன.
- ஆங்கிலேயர்கள் அதை D.C. Land (Depressed Class Land) என அழைத்தனர்.
- பஞ்சமி நிலங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட மக்கள் அந்நிலத்தினைக் குத்தகைக்கு விடுவதோ, தானமாக எவர்க்கும் தரவோ இயலாது.
- 7 முதல் 10 ஆண்டுகளுக்கு எவருக்கும் விற்பனையும் செய்யலாகாது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு வேண்டுமானால், இன்னொரு தாழ்த்தப்பட்ட சமூகத்தவருக்கு மட்டுமே அதனை விற்கலாம். பிறருக்கு விற்பது சட்டப்படி செல்லாது என நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன.

## ரஷ்யாவிலிருந்து வர்த்தக வாய்ப்பை சுமந்து வரும் ரயில்

- முதல் முறையாக சர்வதேச வடக்கு தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் வாயிலாக, ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு ரயில்களில் நிலக்கரி அனுப்பப்பட்டுள்ளது.
- காலம் காலமாக உலக வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சூயஸ் கால்வாய் வழித்தடத்துக்கு மாற்றாக, 2000ம் ஆண்டு ரஷ்யா, ஈரான், இந்தியா ஆகிய மூன்று நாடுகள் இணைந்து துவங்கியது தான், ஐ.என்.எஸ்.டி.சி., எனும் சர்வதேச வடக்கு தெற்க போக்குவரத்து வழித்தடம்.

**வரப்பிரசாதம்**

- ரஷ்யாவின் செயின்ட் பிரிட்டர்ஸ்பர்க்கில் இருந்து மும்பை துறைமுகம் வரை, கிட்டத்தட்ட 7,200 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட இந்த வழித்தடம், ரயில், சாலை மற்றும் கடல்வழிப் போக்குவரத்தை உள்ளடக்கியது.

**என்ன நன்மைகள்?**

1. முதலில், சீனாவின் ‘பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ்’ எனும் பி.ஆர்.ஐ., திட்டத்துக்கு மாற்றாக, இந்தியா இந்த வழித்தடத்தை பயன்படுத்த நினைக்கிறது.
2. இந்த வழித்தடம், இந்திய வர்த்தகர்களுக்கு, மத்திய ஆசிய நாடுகள் மட்டும் மல்லாமல்; ஈரான், ரஷ்யா, அஜர்பைஜான் மற்றும் பால்டிக் மற்றும் நார்டிக் நாடுகளுடன் வர்த்தகம் மேற்கொள்ள வழிவகுக்கும்.
3. சமீபத்தில், ஈரானின் சாபஹார் துறைமுகத்தை 10 ஆண்டுகள் கையாள்வதற்கு இந்தியா மேற்கொண்ட ஒப்பந்தம், இதற்கு மேலும் வலு சேர்ந்துள்ளது.

4. சூயஸ் கால்வாயை பயன்படுத்தும்போது, இந்தியா-ரஷ்யா இடையேயான சரக்கு போக்குவரத்துக்கான நேரம் 45 நாட்கள்.

➢ ஆனால், ஐ.என்.எஸ்,டி,சி., வழித்தடம் இந்த நேரத்தை 25 நாட்களாக, கணிசமாக குறைக்கிறது.

5. மேலும், சரக்கு போக்குவரத்து செலவையும் கிட்டத்தட்ட 30 சதவீதம் குறைக்கிறது.

6. இந்த வழித்தடம், அதிக எண்ணெய் வளங்களை கொண்ட மத்திய ஆசிய நாடுகளிலிருந்து எளிதாகவும், குறைந்த விலையிலும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வழி வகுக்கிறது.

7. மேலும், மின்சாரம் உற்பத்தி மற்றும் உலோக தயாரிப்புக்கு தேவைப்படும் நிலக்கரியை, மலிவான விலையில் வழங்கும் ரஷ்யாவிலிருந்து விரைவாக இறக்குமதி செய்யவகை செய்கிறது.

**பயன்பெறும் துறைகள்**

➢ மின்சாரம், மருந்து, தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், ஜவுளி, விவசாயம், ஆபரணங்கள் போன்ற துறைகளில் வர்த்தகம் அதிகரிக்கும்.

## ஜுலை 1 முதல் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் அமல்

➢ இந்திய தண்டனைச் சட்டம் ஐபிசி குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பி) இந்திய சாட்சியங்கள் சட்டம் உள்ளிட்ட பழைய ஆங்கிலேயர் கால சட்டங்களுக்கு பதிலாக பாரதிய நியாய சன் ஹிதா (பிஎன்எஸ்எஸ்) பாரதிய சாட்சிய அதினியம் ஆகிய மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

**தொழில் நுட்ப உதவிக்கு என்சி ஆர்பி**

➢ புதிய குற்றவியல் சட்டங்களின் விசாரணை மற்றும் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளில் தொழில்நுட்பத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதால் 9 நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் குற்ற வழக்குகளைப் பதிவு செய்யும் தற்போதைய குற்றவியல் கண்காணிப்பு அமைப்புகளில் (சிசிடிஎன்எஸ்) பயன்பாட்டில் 23 செயல்பாட்டு புதுப்பிப்புகளை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (என்சி ஆர்பி) அறிமுகப்படுத்தியுள்ளது.

**திறன் மேம்பாட்டுக்கு பிபிஆர்&டி**

➢ திறன் மேம்பாட்டுக்காக போலீஸ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (பிபி ஆர்&டி) பயிற்சி தொகுதிகளை உருவாக்கி அனைத்து பங்குதாரர்களுடனும் பகிர்ந்து கொண்டுள்ளது.

**களத்தில் பிற அமைச்சகங்கள், அமைப்புகள்**

➢ சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பாக புதிய சட்டங்களின் அமலாக்கம் ஏற்படுத்தும் நேர்மறை தாக்கம் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த மத்திய பஞ்சாயத்து ராஜ், அமைச்சகம் மூலம் 40 லட்சம் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

➢ புதிய சட்டங்களின்கீழ் மின்னணு முறையில் சம்மன் நோட்டிஸ்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வசதியாக, இ-சாஹியா, நியாயஷ்ருகி, இ-சம்மன் ஆகிய 3 செயல்களை தேசிய தகவல் மையம் வான்வழி உருவாக்கியுள்ளது.

➢ ராம்-கலி சமூக ஊடகக் கணக்குகளிலும் புதிய சட்டங்கள் குறித்து தகவல்கள் தொடர்ந்து, பதிவேற்றப்பட்டு வருகின்றன.

## எழுத்தாளர் அருந்ததி ராய்க்கு பிரிட்டனின் பென் பின்டர் விருது

➢ புகழ்மிக்க ‘புக்கர்’ விருது வென்ற எழுத்தாளரான அருந்ததி ராய்க்கு நிகழாண்டுக்கான ‘பென் பின்டர்’ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

➢ பிரிட்டனைச் சேர்ந்த மறைந்த நோபல் எழுத்தாளர் ஹரோல்ட் பின்டர் நினைவாக, பென் தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் ‘பென் பின்டர்’ விருது 2009-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

➢ வரும் அக்டோபர் 10-ஆம் தேதியன்று பிரிட்டிஷ் நூலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் அருந்ததி ராய்க்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.

➢ ‘தி காட் ஆஃப் ஸூமால் திங்ஸ்’ எனும் தனது முதல் நாவலுக்காக புக்கர் விருதை வென்ற எழுத்தாளர் அருந்தி ராய், 14 ஆண்டுகளுக்கு முன்பு காஷ்மீர் குறித்து தெரிவித்த கருத்துகள் காரணமாக பயங்கரவாத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கின் விசாரணையை எதிர்கொண்டு வருகிறார்.